| உட்கட்டுமாணம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 3 | 16,146,691 | 4,842,846 |
| | | **16,204,947** | **4,922,602** |
| **மொத்த சொத்துக்கள்** | | **36,690,168** | **17,298,268** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | 08 | 1,078,133 | 522,327 |
| செலுத்தப்பட வேண்டியவை | 09 | 4,937,657 | 3,749,337 |
| குறுகிய கால ஏற்பாடுகள் | | **6,015,790** | **4,271,664** |
| **நடைமுறையில்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நன்மைகள் | 2 | 2,363,276 | 2,531,151 |
| | | **2,363,276** | **2,531,151** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **8,379,066** | **6,802,815** |
| தேறிய சொத்து | | **28,311,101** | **10,495,453** |
| **தேறிய சொத்து/மூலதனம்** | | | |
| **பங்களிக்கப்பட்ட மூலதனம்** | | | |
| வேறு அரசாங்க நிறுவனங்களினால் | 10 | 47,621,544 | 38,095,460 |
| திரட்டிய மிகை/(பற்றாக்குறை) | 11 | (19,310,443) | (27,600,007) |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்/மூலதனம்** | | **28,311,101** | **10,495,453** |

## தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் நிறுவனம்
## 2016 திசெம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

| | Notes | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வரிகள் | | | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள், உரிமங்கள் | 12 | 10,834,210 | 4,523,073 |
| புனருத்தாரணம் மற்றும் பராமரிப்பிற்கான மானியங்கள் | 13 | 762,910 | 588,772 |
| ஏனைய அரசாங்க நிறுவனங்களில் இருந்தான மாற்றங்கள் | 13 | 17,000,000 | 15,000,000 |
| மனித மூலதன மேம்பாட்டு மானியம் | 13 | 1,301,006 | 878,991 |
| ஏனைய வருமானங்கள் | 14 | 2,748,709 | 1,262,039 |
| **மொத்த வருமானம்** | | 32,646,835 | 22,252,875 |
| **செலவுகள்** | | | |
| கூலிகள், வேதனங்கள், மற்றும் ஊழியர் நன்மைகள் | 15 | 19,330,133 | 14,821,160 |
| வழங்கல்களும் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஏனைய நுகர்வுகளும் | 01 | 706,123 | 713,130 |
| பெறுமானத்தேய்வு | 03 | 2,460,088 | 1,802,512 |
| ஏனைய செலவினங்கள் | 16 | 6,541,119 | 4,776,479 |
| நிதிக் கிரயங்கள் | 01 | 119,910 | 124,744 |
| **மொத்தச் செலவினங்கள்** | | 29,157,373 | 22,238,025 |
| **காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை)** | | 3,489,462 | 14,850 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஈடியூ/பீ/என்ஜஎல்ஐஎஸ்/எப்ஏ/16 — මබේ අංකය / உமது இல. / Your No. } — දිනය / திகதி / Date } 2017 யூலை 28

பணிப்பாளர்
தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டில் கையேற்கப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,647,552 ஆக இருந்த போதிலும், ஆண்டில் பணமாக செலுத்தப்பட்ட அளவு ரூபா 1,528,552 ஆக இருந்தது. எவ்வாறாயினும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கையேற்கப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதி காசு வெளிப் பாய்ச்சலாக கருதப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் மற்றும் ஆரம்ப மீதிகளுக்காக செய்யப்பட்ட சீராக்கம் ரூபா 1,012,967 தொகை செயற்பாட்டு இலாபத்திற்கு தாக்கம் செலுத்தப்படாதிருக்கையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய ஒய்வூதிய பணிக்கொடை நடைமுறைப்பொறுப்பு

அதிகரிப்பாக சீராக்கம் செய்யப்பட்டிருக்கையில் செயற்பாட்டு இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நிலையான சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 18,316,900 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 42,812,944 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அம்மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 16,146,691 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மானியங்களைக் கணக்கு வைத்தல் தொடர்பாக நிறுவகத்தினால் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் மூலம் உருவாகிய ரூபா 4,800,000 ஆன மிகை, மூலதன மாற்றங்கள் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அது திரண்ட நிதியத்துடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மூன்று சொத்து வகைக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் ஒப்பிட்டபோது முறையே ரூபா 65,424 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அதிகரிப்பாக சீராக்கம் செய்யப்பட்டிருக்கையில் செயற்பாட்டு இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

நிலையான சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 18,316,900 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 42,812,944 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அம்மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 16,146,691 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மானியங்களைக் கணக்கு வைத்தல் தொடர்பாக நிறுவகத்தினால் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் மூலம் உருவாகிய ரூபா 4,800,000 ஆன மிகை, மூலதன மாற்றங்கள் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அது திரண்ட நிதியத்துடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மூன்று சொத்து வகைக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் ஒப்பிட்டபோது முறையே ரூபா 65,424 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டி | |
| (i) 7 (3) பிரிவு | முதுமானி / முனைவர் பாடநெறிகள் தொடர்பான நடவடிக்கைகள் உயர் பட்டப்படிப்பு குழுவொன்று மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இப் பாடநெறிக்குரிய செயற்பாடுகள் கல்விக்குழுவின் ஊடக மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 12 (1) (இ)பிரிவு | கல்விக்குழுவின் அங்கத்தவராக அதிகாரச்சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு நூலகம் மற்றும் தகவல்கள் விஞ்ஞான பிரிவின் தலைவர்கள் 2016 ஆம் ஆண்டில் எவ்வித கூட்டங்களுக்கும் சமூகமளித்திருக்கவில்லை. |
| (iii) 12 (1) (உ)பிரிவு | கல்விக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட இலங்கை தேசிய நூலகச் சங்கத்தின் பிரதிநிதியாக 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற 09 கூட்டங்களில் 3 கூட்டங்களுக்கு மாத்திரம் சமூகமளித்திருந்தார். |
| (iv) 12 (1) (ஊ)பிரிவு | கல்விக்குழுவின் அங்கத்தவராக அனைத்துப் பல்கலைக்கழக நூலகர் குழுவின் அங்கத்தவர்களுக்கிடையே பெயரிடப்பட்ட இரண்டு நூலகர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக மாத்திரம் இரண்டு நூலகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,489,462 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,850 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,474,612 தொகையான

அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. செலவினங்கள் ரூபா 6,919,348 ஆல் அதிகரித்தமைக்கு ஒப்பாக வருமானம் ரூபா 10,393,960 ஆல் அதிகரித்திருந்தமையால் மேற்படி நிதி விளைவகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்யை 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,796,279 ஆன நிறுவகத்தின் பற்றாக்குறை 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது நிதி மிகையொன்றாக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீண்டும் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் ரூபா 10,448,949 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 25,327,683 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உலக வங்கி உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட பொதுக் கல்விச் செயற்திட்டம் 2 (GEP-2) (1994 – 2002) இன் கீழ் பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக சேர்க்கப்பட்ட நூலகர்கள் மற்றும் அந்தப் பாடசாலைகளின் ஆசிரிய நூலகர்களுக்காக தேவையான மனித வளங்களைப் பயிற்றுவிப்பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் விஞ்ஞான நிறுவகம் 1999 ஏப்ரல் 20 ஆந் திகதி உருவாக்கப்பட்டது.

நிறுவகத்தின் மூலம் மீளாய்வாண்டில் பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பான செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) மற்றும் ஆசிரிய நூலகர் தொடர்பான பட்டபின் டிப்ளோமா (PGTL) போன்ற பாடநெறிகளை நடத்துவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆசிரிய நூலகர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு வழங்குதல் நடைமுறைக்கு ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) மற்றும் ஆசிரிய நூலகர் தொடர்பான பட்டபின் டிப்ளோமா (PGTL) போன்ற தகைமைகளை உள்ளடக்குவதற்கு 2009 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 09/1488/316/055 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கல்வி அமைச்சு செயற்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும்,

இத்தகைமைகள் ஆசிரியர் கோவை பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (PGTL) பாடநெறிக்காக 2012, 2013, 2015 மற்றும் 2016 ஆம் கல்வியாண்டுகளுக்காக மாணவர்கள் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன் அதில் 09 பேர் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன் எஞ்சிய 11 பேரும் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(iii) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) பாடநெறிக்காக 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக 26 மாணவர்கள் பதிவுசெய்திருந்ததுடன் அதில் 13 பேர் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன் 13 பேர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(iv) மேற்படி (i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை பாடநெறிகளுக்காக மாணவர் கேள்வி குறைவடைவதற்கு காரணங்களாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நூலக மற்றும் தகவல் விஞ்ஞான முதுமானி தத்துவவியல் / முனைவர் பட்ட பாடநெறிகளுக்காக தொடர்ச்சியாக ஒவ்வொரு கல்வியாண்டிற்காகவும் இணையத்தளம், செய்தித்தாள் மற்றும் வர்த்தமானி மூலம் தகவல்கள் விளம்பரப்படுத்தப்பட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2007-2010 முதல் 2016-2019 வரையான 10 கல்வியாண்டுகளில் 6 ஆண்டுகளுக்கு பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காமல் இருந்ததுடன் ஏனைய கல்வியாண்டுகளுக்காக 19 மாணவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(i) 2007/2010 கல்வியாண்டிற்காக பதிவுசெய்யப்பட்ட 07 மாணவர்களில் ஒரு மாணவர் 2017 ஆம் ஆண்டின் போது முதுமானி பட்டத்தையும் இன்னுமொரு மாணவர் 2016 ஆம் ஆண்டின் போது முதுமானி பட்டத்தையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன், எஞ்சிய மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்தனர்.

(ii) 2011/2014 கல்வியாண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட 3 வருடக் கல்விக் காலம் கடந்திருந்ததுடன், அம்மாணவர்கள் பாடநெறி காலத்தை நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான கலைமானி (MLS – FT) பட்டப் படிப்பு பாடநெறி 2 ஆண்டு கால பாடநெறியாக இருந்துடன், 2013-2015 மற்றும் 2014-2016 என 02 கல்வியாண்டுகளுக்காக பதிவுசெய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன், 05 மாணவர்கள் பாடநெறியை பூர்த்தி செய்திருந்தனர். எவ்வாறாயினும் இரண்டு மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்ததுடன் 04 மாணவர்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடநெறியில் தரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 18 மாத பாடநெறியொன்றான தகவல் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பாடநெறி (PGDIM) இற்காக 2013-2014 மற்றும் 2014 - 2015 ஆகிய 2 கல்வியாண்டுகளுக்காக 27 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டு 07 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியை பூர்த்தி செய்திருந்ததுடன் 10 மாணவர்கள் காலத்தை நீடிப்புச் செய்திருந்தனர். மேலும் 10 மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்தனர். 2015-2016 கல்வி ஆண்டிற்காக 11 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2016-2017 கல்வியாண்டிற்காக எந்தவொரு மாணவரும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு அவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்படாமையால் செலவிடப்படாத அரச மூலதன மானியக் கணக்கில் 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,362,641 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 4,200,000 ஆன மானியம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 762,910 மற்றும் ரூபா 1,301,006 தொகை முறையே மீண்டெழும் மானியங்கள் மற்றும் மூலதன அபிவிருத்தி மானியக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தன. கொள்வனவிற்காக ஆண்டினுள் ரூபா 1,528,552 செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 2,970,173 ஆக இருந்தது.

(ஆ) 1999 இன் ·01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 11 (2) (ஜ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்காக உடனடியாக தேவைப்படாத பணத்தை

ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி நிறுவகத்திற்குச் சொந்தமான நடைமுறைக் கணக்குகளின் மீதி ரூபா 12,366,248 தொகையும் ஒவ்வொரு மாத இறுதியிலும் சராசரி வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 9,664,521 எனப் பேணப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | கணனி மற்றும் உபபாகங்களின் கிரயம் இனங்காணக்கூடிய வகையில் பதவேடுகள் பேணப்பாடமை. |
| (ஆ) தொழிற்பாட்டுக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்காக மாணவர்களின் கேள்வியை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

NILIS

# National Institute of Library and Information Sciences

University of Colombo, Colombo 03, Sri Lanka

Tele /Fax: +94-11-2507150, e-mail: director@nilis.cmb.ac.lk, Web: www.nilis.cmb.ac.lk

எனது இல: NILIS/F/35/2/16
11.09.2017

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
306/72, பொல்டுவ சாலை,
பத்தரமுல்லை

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் தொடர்பான கணகாய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

கணக்காய்வு அறிக்கை EDU/B/NILIS/FA/16 தொடர்பில் எமது கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் பின்வருமாறு.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.2 நிதிக்கூற்று தொடர்பான அபிப்பிராயம்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்கள்**

(அ) (i), (ii) இனி வரவிருக்கும் வருடங்களில் காசு- பாய்வுக் கூற்று தயாரிக்கும் போது மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறு காசுப் பாய்வுக் கூற்றினது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) முற்றாகத் தேய்மானம் இடப்பட்ட நிலையான சொத்துக்களை மீள மதிப்பீடு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

2017 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கின்ற போது, இது தொடர்பில் ஒரு பொருத்தமான கொள்கையை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2017 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.3 விளக்கப்படாத வித்தியாசங்கள்**

2017 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கின்ற போது நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் நிறுவனத்தின் 1999 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்

(i) பிரிவு 7(3)
கட்டளைச் சட்டத்தின் 13(1) மற்றும் (2) பிரிவுகளுக்கு இணங்க கல்விசார் குழு அனைத்து கற்கைகள், ஆராய்ச்சிகள் மற்றும் பரீட்சைகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது. ஆகவே, சில சமயங்களில் உயர் பட்டங்களுக்கான குழு கூடாத இடத்து, கல்விசார் குழுவின் பரிந்துரைகள் முகாமைத்துவச் சபை மற்றும் மூதவையின் ஒப்புதலுக்கு பாரப் படுத்தப்பட்டது. இற்றை அளவில், உயர் பட்டங்களுக்கான குழு நியமிக்கப் பட்டிருக்கின்றது. அதன் அமர்வுகள் தேவைப்படும் போது 2017 ஆம் ஆண்டில் நடைபெறும்.

(ii) பிரிவு 12 (I) (C)
களனிப் பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான துறைத் தலைவருக்கு கல்விசார் குழுக் கூட்டங்கள் பற்றி அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும், அவர் கூட்டங்களுக்குச் சமூகம் அளித்திருக்கவில்லை. ஆனால், 2017 ஆம் ஆண்டு மார்ச்சில் இருந்து வணக்கதிற்குரிய போதகரான துறைத் தலைவர் கூட்டங்களுக்குச் சமூகம் அளித்து வருகின்றார்.

(iii) பிரிவு 12 (I) (e)
அறிவிக்கப்பட்டு இருந்த போதும், பிரதிநிதி அவரின் வேலைப்பளு காரணமாக கூட்டங்களுக்குச் சமூகம் தரவில்லை.

(iv) பிரிவு 12 (I) (f)
நாம், பொருத்தமான உறுப்பினர்களை நியமிக்குமாறு, எமது 2016 ஜூலை 25ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் வேண்டுகோள்கள் விடுத்து இருந்த போதும், நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிலையியற் குழு, அவர்களது 2016 செப்தெம்பர் 27ஆம் திகதிய கடிதத்தின் மூலமே உறுப்பினர்களை நியமித்திருந்தது.

## 4.00 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 4.1 செயலாற்றல்

(அ)

(i) இந்த விடயம் தொடர்பாக, கல்வி அமைச்சிற்கு மீண்டும் மீண்டும் பிரதிநிதித்துவங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன. இந்த விடயம் பொது நிறுவனங்கள் (COPE) தொர்பான குழுவின் அமர்வுகளிலும் கலந்துரையாடலுக்கு எடுக்கப் பட்டது. இதனால், பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் தலைவர் இந்த விடயத்திற்கு கல்வி அமைச்சின் நேரடித் தலையீடு தேவையாக இருக்கின்றது என வலியுறுத்தினார். எமது நிறுவனத்தின் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, அனைத்து நூலகப் பணியாளர்களுக்கும் கற்கைநெறிகளை நடாத்துவதற்கான அதிகாரம் வழங்கப் பட்டிருக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் இருந்து ஒரு புறம்பான நூலக உதவிப் பணியாளர் கல்வி அமைச்சினால் ஆசிரிய- நூலகர்களுக்குப் பதிலாக நியமிக்கப் பட்டிருக்கின்றார். அவ்வாறான பணியாளருக்குத் தேவையான பயிற்சிகள் எமது நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, நாங்கள் இந்தக் கற்கைநெறிகளை மாகாண மட்டங்களில், ஊவா, சப்பிரகமுவ, மற்றும் மத்திய மாகாணம் போன்ற மாகாணங்களில் ஆரம்பித்திருக்கின்றோம். நடாத்தப்பட்ட கற்கைநெறிகளைத் தொடர்ந்து, எமது நிறுவனத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டதை விட விஞ்சியது.

பாடசாலை முறைமைக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர் நூலகர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர் நூலகர்வியலில் முதுமாணி (MTL) மற்றும் ஆசிரியர் நூலகர்வியலில் பட்டப்பின் டிப்புளோமா (PGTL) நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களின் பதவி உயர்விற்குப் பொருத்தமானதாக ஆசிரியர்களின் சேவைக் குறிப்பில் உள்ளடக்குவதற்கு நாம் கடந்த பல வருட காலப் பகுதிகளில் முயற்சிகளை மேற்கொண்டு இருந்தோம். இந்த விடயம் தொடர்பாக நிலமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, 09 நினைவூட்டற் கடிதங்கள் கல்வி அமைச்சின்

செயலாளருக்கு எமது துறைசார் அமைச்சான உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப் பட்டன (30.11.2006 இலிருந்து 14.06.2017 வரை). ஆனால் இது வரையில் எந்த பதிலும் பெற்றுக்கொள்ளப் படவில்லை. இத்துடன் குறித்த கடிதங்களின் பிரதிகள் இணைக்கப் படுகின்றன (இணைப்பு 01-09).

(ii) குறித்த வருடங்களில் 23 மாணவர்கள் ஆசிரியர் நூலகர்வியலில் பட்டப்பின் டிப்புளோமாவிற்கு (PGTL), 2010/2011 ஆண்டின் முழு- நேர கற்கைநெறிக்கு 08 உம், 2010/2012 ஆண்டின் பகுதி- நேர கற்கைநெறிக்கு 08 உம் மற்றும் 2011/2013 ஆண்டின் பகுதி- நேர கற்கைநெறிக்கு 07 உமாக பதிவுசெய்திருந்தனர் (இந்த எண்ணிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் கூறப்பட்டவாறு 20 மாணவர்கள் அல்ல). அவர்கள் அனைவரும் வெற்றிகரமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்திருந்தனர். 04 மாணவர்கள் 2014/2015 கல்வி ஆண்டிற்குப் பதிவுசெய்திருந்ததுடன் அவர்களின் 03 மாணவர்கள் வெற்றிகரமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்திருந்தனர்.

2010/2011 ஆண்டின் முழு- நேர ஆசிரியர் நூலகர்வியலில் பட்டப்பின் டிப்புளோமாவிற்கு (PGTL) பதிவுசெய்திருந்த மாணவர்களினுள் ஒரு மாணவர் குறித்த பாடங்களில் குறித்த கல்வி ஆண்டில் சித்தியடையாமை மற்றும் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமை காரணமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. ஏனைய இரண்டு மாணவர்களும் கற்கைநெறிக்குப் பொருத்தமான பாடங்களில் சித்தி அடைந்திருந்த போதிலும், அவர்களால் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியவில்லை. அவர்கள் அவர்களுடைய திட்ட அறிக்கையை குறித்த கல்வியாண்டு காலப் பகுதியில் கையளிக்குமாறு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

(iii) குறிப்பிடப்பட்ட குறித்த ஆண்டுகளில் MIL ற்குப் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 26 அல்ல 23 ஆக இருக்க வேண்டும். 12 மாணவர்கள் முழு- நேர மாணவர்களாக 2012/ 2013 கல்வி ஆண்டிற்கும் 06 மாணவர்கள் பகுதி- நேரமாக 2012/ 2014 கல்வி ஆண்டிற்குப் பதிவுசெய்திருந்தனர். அவர்களுள் 09 முழு- நேர மாணவர்கள் மற்றும் 03 பகுதி- நேர மாணவர்கள் வெற்றிகரமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்திருந்தனர். 2014/ 2015 கல்வி ஆண்டிற்கு 06 முழு- நேர மாணவர்களாக பதிவுசெய்திருந்தனர். அவர்களில் 01 மாணவர் வெற்றிகரமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்திருந்தார்.

2014/ 2015 கல்வி ஆண்டு ஆசிரியர் நூலகர்வியலில் முதுமாணிக்கு பதிவுசெய்திருந்த மாணவர்களில் ஒருவர் குறித்த கல்வி ஆண்டு காலப் பகுதியில் கற்கைநெறிக்குப் பொருத்தமான பாடங்களில் சித்தி அடையாமை மற்றும் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்காமை காரணமாக கற்கைநெறியினைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. மற்ற இருவரும் குறித்த கல்வி ஆண்டு காலப் பகுதியில் குறித்த பாடங்களில் சித்தி அடைந்திருந்தனர் ஆனால் அவர்களால் அவர்களின் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பிக்க முடியவில்லை. அவர்கள் வருடா வருடம் குறித்த கல்வி ஆண்டு காலப் பகுதியில் அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப் பட்டனர்.

(iv) திரும்பத் திரும்ப கல்வி அமைச்சிற்கு பிரதிநிதித்துவங்கள் சமர்ப்பிக்கப் பட்டன. இந்த விடயம் COPE அமர்வில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் பிறகு COPE குழுவின் தலைவர் இந்த பிரச்சினைக்கு கல்வி அமைச்சின் தலையீடு தேவை என வலியுறுத்தினார்.

கலந்துரையாடல்களின் விளைவாக கல்வி அமைச்சு 10 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான பணிப்பாளர்களுக்கு MTL, MSc கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு 2017 ஆம் ஆண்டில் நிதி வழங்குவதற்கு இணங்கியது. அந்தக் கற்கைநெறியினை 2017 செப்தெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்படுகின்றது (இணைப்பு 10). இந்த மாணவர்களுக்கு மேலதிகமாக, 13 மாணவர்கள் கற்கைநெறியினைத் தொடர்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

(ஆ) அனைத்து ஆராய்ச்சிக் கற்கைநெறிகளும் (MPhil/ PhD) கட்டாய சுய- ஊக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்வது மாணவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தில் தங்கியுள்ளது. MPhil/ PhD பட்டக் கற்கைநெறிகளுக்கான

விண்ணப்பங்கள் வருடா வருடம் கோரப்படுவதில்லை. இது வரையில் விண்ணப்பங்கள் 2007, 2011, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் விளம்பரங்கள் ஊடாகக் கோரப்பட்டன.

(i) நிறுவனம் 2007 ஆம் ஆண்டில் 07 மாணவர்களில் 05 மாணவர்களின் பதிவினை அவர்களின் முன்னேற்றம் விரும்பப்படும் மட்டத்தில் இல்லாமை மற்றும் அவர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட MPhil/ PhD கற்கைநெறி தொடர்பான அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிராததன் அடிப்படையில் இரத்துச் செய்வதற்குத் தீர்மானித்தது. அந்த மாணவர்களில் ஒருவர் 2016 திசெம்பரில் பட்டமளிப்பு விழாவில் PhD பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். பிறிதொரு மாணவி அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரையினைக் கையளித்திருந்தார். அவருக்கு 2017 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற இருக்கும் பட்டமளிப்பு விழாவில் MPhil பட்டம் வழங்கப்பட உள்ளது.

(ii) MPhil/ PhD - 2011/2014 இற்கு பதிவுசெய்துகொண்ட 3 மாணவர்கள் தொடர்பில் அவர்களுடைய முன்னேற்றம் விரும்பப்படும் தேர்ச்சி மட்டத்தினை அடையாமையினால் அவர்களுடைய மேற்பார்வையாளர்களிடம் இருந்து இரகசிய அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் இந்த இரு மாணவர்கள் தொடர்பில் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கு அது கல்விசார் குழவிற்குப் பாரப்படுத்தப்படும். மற்றைய மாணவர் அவருடைய காலத்தை நீடித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றார்.

(இ) 04 மாணவர்கள் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி (MLS) 2013-2015 கல்வி ஆண்டிற்குப் பதிவுசெய்திருந்தனர். அவர்களில் ஒரு மாணவர் வெளிநாட்டில் PhD இனைத் தொடர்வதற்காக கற்கைநெறியிலிருந்து பின்வாங்கியிருந்தார். நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி (MLS) பட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மற்றைய மாணவருக்கு ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டிருந்த போதிலும் அவர் அதனைச் சமர்ப்பித்திருக்கவில்லை. 07 மணவர்கள் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி (MLS) - 2014/ 2016 கல்வி ஆண்டிற்குப் பதிவுசெய்திருந்ததுடன் 03 மணவர்களுக்கு நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணி (MLS) பட்டம் வழங்கப்பட்டிருந்தது. 2014/2016 கல்வி ஆண்டின் வேறு இரண்டு மாணவர்கள் அவர்களுடைய ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்து இருந்தார்கள். மற்றைய மாணவர் அவரது காலத்தை நீடித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா முழு நேர கற்கைநெறிக்கு 2013- 2014 ஆம் கல்வி ஆண்டிற்கு 10 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் 2014- 2015 ஆம் கல்வி ஆண்டின் பகுதி- நேர கற்கைநெறிக்கு 11 மணவர்கள் பதிவுசெய்திருந்தனர். மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 21 ஆகும் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் இந்த எண்ணிக்கை தவறுதலாக 27 எனக் கூறப்பட்டிருந்தது). முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா 2014- 2015 முழு- நேர கற்கைநெறிக்குப் பதிவுசெய்திருந்த மாணவர்களில் 04 ருக்கு டிப்புளேமாக்கள் வழங்கப்பட்டதுடன், ஏனையவர்களில் 03 அவர்களுடைய திட்ட அறிக்கையினைச் சமர்ப்பித்திராத போதும் அனைத்துப் பாடங்களிலும் சித்தி அடைந்திருந்தனர். இற்றையளவில் ஒரு மாணவர் அவரது திட்ட அறிக்கையினை கையளித்து இருந்தார். மற்றைய இரு மாணவர்களுக்கும் திட்ட அறிக்கைகளைக் கையளிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அதனைக் கடைப்பிடிக்கவில்லை. பிறிதொரு மாணவர் மீள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தார். ஆனால் அவர் அவருடைய திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை. தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா – 2013- 2014 நிகழ்ச்சித் திட்டத்தின் முழு- நேர கற்கைநெறியின் 10 மாணவர்கள், முதற் பரீட்சைக்குத் தோற்றியிருந்த போதிலும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. ஆகவே, அவர்கள் அவர்களுடைய திட்ட அறிக்கைகளைக் கையளிக்குமாறும் பரீட்சைகளுகுத் தோற்றுமாறும் அறிவிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் பரீட்சைகளுக்குத் தோற்றியிருக்கவில்லை.

2014- 2015 ஆம் கல்வியாண்டு பகுதி- நேர மாணவர்களில் இருவருக்கு தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா பட்டமளிக்கப்பட்டது. 5 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தி அடைந்திருந்த போதிலும் அவர்கள் அவர்களுடைய திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. அந்த ஐந்து மாணவர்களில் 03 மாணவர்கள் இற்றையளவில் திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கின்றனர். மீதம் இருக்கும் இரண்டு மாணவர்களுக்கும் திட்ட அறிக்கைகளைக் கையளிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. பகுதி- நேர மாணவர்களில் (2014/ 2015) ஒருவர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும் எந்தப் பரீட்சைக்கும் சமூகமளித்திருக்கவில்லை

தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்புளோமா 2016/ 2017 கற்கைநெறிக்கு விளம்பரங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. உண்மைகள் அவ்வாறு இருக்கின்ற போது கற்கைநெறியினை ஆரம்பிப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை.

**4.2 நிதிகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை**

(அ) இந்த நிதிகள் 2016 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தினுள் செலவிடப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாததுடன், 2017 ஆம் ஆண்டில் குறித்த கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவு பெறுவதுடன் இந்தக் கணக்கில் எந்த நிலுவையும் இருக்காது, ஏனெனில் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவுப் பணி நிறைவு பெற்றிருந்திருக்கவில்லை.

(ஆ) இந்தத் தொகையினுள் செலவிடப்படாத மூலதன நிலுவையும் கூட உள்ளடக்கப்பட்டது. குறித்த கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவடைவதுடன் இந்த நிலுவை அந்தத் தொகையினால் குறைக்கப்படும். 2017 ஆம் ஆண்டில் மேலதிகமாக் கிடக்கும் மேலதிக பணத்தினை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைப்பாடுகளை குறைப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்படும்.

(அ) அனைத்து கணினி மற்றும் துணைப் பாகங்களுக்கு பொருள் குறியீடு தரப்பட்டிருப்பதுடன் பொருத்தமான குறியீடுகளுடன் முத்திரையிடப்பட்டு உள்ளது. 2017 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஒவ்வொரு பொருளினதும் பெறுமதியினைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கற்நெறிகளிற்கான மாணவர்- கேள்வியை அதிகரிக்கும் பொருட்டு, 2016 ஆம் ஆண்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இந்த நோக்கத்திற்காக பின்வரும் மூலோபாயங்கள் பிரயோகிக்கப் பட்டன.

I. எமது நிறுவனம் 2016 ஆம் ஆண்டிலிருந்து, கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட நூலக உதவிப் பணியாளர்களுக்கு அவசியமான பயிச்சியினை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. இந்த ஒழுங்குகளுக்கு மேலதிகமாக, ஊவா, சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்கள் போன்ற தொலைவான இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்காக பிரதேச மட்டத்தில் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த முனைப்புகள் மாணவர்களின் எண்ணிக்கையினை 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டதனை விட அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. 2017 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

II. தமிழ்- மொழி மூல கற்கைநெறிகளை ஆரம்பித்தல் (ஊவா மாகாணம்)

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் விளைவாக, பல்கலைக்கழக நூலகங்களின் உதவிப் பணியாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இந்த நோக்கத்திற்கான ஏற்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவினால் அனுமதிக்கப்பட்டிருந்தது.

IV. கல்வி அமைச்சு அவர்களுடன் நாம் மேற்கொண்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து 10 மாணவர்களுக்கு ஆசிரியர் நூலகர்வியலில் முதுமாணி பட்டக் கற்கைநெறியினைத் தொடர்வதற்கான ஏற்பாட்டினை அனுமதிப்பதற்கு உடன்பட்டது.

நன்றி

ஒப்பமிடப்பட்டது. **பிரசன்ன ரணவீர**
பணிப்பாளர்

காபன் பிரதி:

01. செயலாளர்/நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
02. செயலாளர்/உயர் கல்வி அமைச்சு
03. தலைவர்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
04. துணை வேந்தர்/ கொழும்புப் பல்கலைக்கழகம்